# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**

**சுற்றறிக்கை எண் 20/2014** **நாள் : 06/09/2014**

**பெறுநர்**

மாநில நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்
செயற்குழு உறுப்பினர்கள் மற்றும்
கணக்கீட்டு குழு உறுப்பினர்கள்.

அன்பான தோழரே, வணக்கம்.

04.06.2014 அன்று திருச்சியில் நடைபெற்ற கணக்கீட்டு அலுவலர்களின் ஆலோசனைக்குழு கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கைகளையும், ஏற்கனவே கணக்கீட்டுக்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின் கோரிக்கைகளையும் வாரியத் தலைவரிடம் இன்று நேரடியாக வழங்கி சங்க நிர்வாகிகளால் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது.

கோரிக்கைகளின் மீது வாரியத் தலைவரின் சாதகமான அணுகுமுறையையும் வாரியத்தால் மேற் கொள்ளப்பட்டுள்ள முடிவுகளையும் கணக்கீட்டு பிரிவு ஊழியர்கள் மத்தியில் உடனடியாக கொண்டு செல்லுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

1. கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வு வாய்ப்புகளை அதிகப்படுத்தும் வகையில் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் கணக்கீட்டு அலுவலர் பதவியும், மேற்பார்வை மின்பொறியாளர் அலுவலகத்தில் தலைமை கணக்கீட்டு அலுவலர் பதவியும், தலைமைப் பொறியாளர் /விநியோகம் அலுவலகத்தில் முதன்மை கணக்கீட்டு அலுவலர் பதவியும் அனுமதிக்குமாறு சங்கத்தின் சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

வாரியத்திலுள்ள ஏனைய பிரிவுகளில் வழங்கப்படும் பதவி உயர்வு நிலைகளுக்கு ஏற்ப கணக்கீட்டு பிரிவிலும் பதவி உயர்வு வாய்ப்புகளை உருவாக்குவதில் வாரியம் ஆர்வமாக இருப்பதாகவும் அதனடிப்படையில் உங்களது கோரிக்கையும் சாதகமாக பரிசீலிக்கப்படும் என்றும், வாரியத் தலைவர் பதில் அளித்தார்.

2. கணக்கீட்டு ஆய்வாளர் பதவியிலிருந்தும், வருவாய் மேற்பார்வையாளர் பதவியிலிருந்தும் அடுத்த பதவி உயர்வுக்கு முறையே மூன்று ஆண்டுகள், ஐந்தாண்டுகள் பணி முடித்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையை முற்றாக நீக்க வேண்டும் என்று சங்கத்தின் சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

உடனடியாக கணக்கீட்டு ஆய்வாளர் பதவியிலிருந்து, வருவாய் மேற்பார்வையாளர் பதவி உயர்வுக்கு கணக்கீட்டு ஆய்வாளராக மூன்று ஆண்டுகள் பணிமுடித்திருக்க வேண்டும் என்பதற்கு பதிலாக ஓராண்டு பணிமுடித்திருந்தால் போதுமென்று வாரியம் முடிவெடுத்திருப்பதாகவும் அதற்குரிய உத்திரவுகள் இரண்டொரு நாட்களில் வெளியிடப்படும் என்றும், வருவாய் மேற்பார்வையாளர் பதவியிலிருந்து கணக்கீட்டு அலுவலர் பதவி உயர்வுக்கும் இதே போன்று நிபந்தனைகள் விரைவில் தளர்த்தப்படும் என்றும் வாரியத்தலைவர் தெரிவித்தார்.

3. பதவி உயர்வுக்கு வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்ட கால அளவை முடித்துள்ள சுமார் 3400 கணக்கீட்டாளர் இரண்டாம் நிலையில் உள்ளவர்களை கணக்கீட்டாளராக பதவி உயர்வு வழங்க வேண்டும் என நாம் வலியுறுத்தியதில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வெகு விரைவில் பதவி உயர்வுக்கான உத்திரவு வெளியிடப்படும் எனவும் வாக்குறுதி அளித்தார்.

4. கணக்கீட்டாளர் 2ம் நிலையிலிருந்து கணக்கீட்டாளராக பதவி உயர்வு வழங்கும் நமது கோரிக்கையும், கணக்கீட்டாளர் பதவிலிருந்து, கணக்கிட்டு ஆய்வாளர் பதவி உயர்வுக்கு கூடுதலாக 933 கணக்கீட்டளார்களுக்கும் சேர்த்து தகுதிகாண் அறிக்கை கோர வேண்டும் என்ற நமது கோரிக்கையும் பரிசீலனையில் இருப்பதாக வாரியத் தலைவர் தெரிவித்தார்.

5. சில கிளைகளிலிருந்து கணக்கீட்டாளராக நியமனம் செய்யப்பட்ட 11 பேர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்கு உரியகல்வித் தகுதி இல்லை என்னும் காரணத்தால் பதவி உயர்வு வழங்க மறுப்பதை சுட்டிக்காட்டி வாரியத் தலைவருடன் பேசப்பட்டது. பாதிக்கப்பட்ட 11 கணக்கீட்டாளர்களுக்கு உடனடியாக அவர்களது விருப்பத்தின்அடிப்படையில் கணக்கீட்டு ஆய்வாளர் பதவியும், கம்பியாளர் பதவியும் வழங்கப்படும் என்று நிர்வாகத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

6. 9.1.2014 வேலைபளு - ஊதிய உயர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இருக்கின்ற மின் இணைப்புகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப கணக்கீட்டு பிரிவில் புதிய பதவிகளை அனுமதிக்க வேண்டும் என்றும் சங்கத்தின் சார்பில் வலியுறுத்தப்பட்டது. அனைத்து மேற்பார்வை பொறியாளர் அலுவலகத்திலிருந்தும் புதிய பதவிகளுக்கான ஆலோசனை பட்டியல் கோரப்பட்டிருப்பதாகவும் பட்டியல் வந்தவுடன் புதிய பதவிகளுக்கான அனுமதி வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

7. கணக்கீட்டு அலுவலர்களின் மாநிலந் தழுவிய கூட்டத்தில் வாரியத் தலைவர் கலந்து கொண்டு அவர்களது குறைகளை நேரடியாக கேட்டறிய வேண்டும் என்றும், கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின் எஞ்சிய கோரிக்கை மீது வாரியத் தலைவரும், உயர்மட்ட அலுவலர்களும் கலந்து கொள்ளும் பேச்சு வார்த்தைக்கு நாள் ஒதுக்கித் தரவேண்டும் என்று சங்கத்தின் சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது. உரிய முறையில் பரிசீலிக்கப்படும் என்றும் வாரியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

8. களப்பிரிவில் மஸ்தூர் பதவியிலிருந்து கள உதவியாளராக எஞ்சியுள்ள 5904 ஊழியர்களுக்கும் உதவி உயர்வு வழங்க வேண்டும் என்ற நமது கோரிக்கையும் வாரியத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு இரண்டொரு தினங்களில் உத்தரவு வெளியாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணக்கீட்டுக்குழுக்கூட்டத்திலும், திருச்சியில் நடைபெற்ற கணக்கீட்டு அலுவலர் ஆலோசனைக்குழுக் கூட்டத்திலும் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு கோரிக்கைகள் எழுத்து பூர்வமாக நிர்வாகத்திடம் வழங்கப்பட்டுள்ளது.

இக் கோரிக்கைகளில் முக்கியமான சில கோரிக்கைகள் மட்டும் வாரியத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு உரிய உத்தரவும் இரண்டொரு தினங்களில் வெளிவர உள்ளது. இது நமது சங்கத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட தொடர் முயற்சிக்கு கிடைத்த வெற்றி என்பதை சம்மந்தப்பட்ட கணக்கீட்டு பிரிவு ஊழியர்கள் மத்தியில் உடனடியாக கொண்டு செல்லுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின் எஞ்சியுள்ள நீண்டநாள் கோரிக்கைகளின் மீது வாரியத்திடம் தொடர்ந்து பேசி வலியுறுத்தி நிறைவேற்ற வேண்டியுள்ளது. தேவைப்படும்பட்சத்தில் ஏற்கனவே நிர்வாகிகள் கூட்டத்தில் திட்டமிட்டவாறு கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலம்தழுவிய கணக்கீட்டுபிரிவு ஊழியர்களின் ஆர்ப்பாட்டத்தினையும் நடத்திட வேண்டியுள்ளது.

இதற்கு ஏற்றவகையில் இப்பிரிவு ஊழியர்களின் குழுக்களை வட்டம் வாரியாக அமைத்து அவர்களின் கூட்டங்களை நடத்தி இப்பிரிவு ஊழியர்களின் கோரிக்கை மீது நமது தொடர் முயற்சியை விளக்கி ஸ்தாபனப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்

இணைப்பு
வாரியத் தலைவரிடம் வழங்கப்பட்டுள்ள
கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின்
கோரிகக்கை பட்டியல் கடித நகல்

## குறிப்பு

கணக்கீட்டாளர் இரண்டாம் நிலையிலிருந்து, கணக்கீட்டாளராக பதவி உயர்வு வழங்க ஐந்தாண்டு காத்திருந்த பின்னரும், மேலும் வாரியம் காலதாமதம் செய்து வழங்கிய காலத்திற்கு நிலுவைத் தொகை வழங்க வேண்டும் என வாரியத்திடம் முறையீடும், நீதிமன்றமும் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது